1983 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக்குழு இன்று கூட்டப்படுகின்றது.

3. உரிமைப் பிரச்சினை

பொறுக்குக் குழுவின் ஆய்வில் ஒரு சட்ட முன்வடிவு இருக்கும்போது அதே பிரிவுகளைக் கொண்ட ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தல்

மாண்புமிகு பேரவை தலைவர்: அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. நேற்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை பேரவையில் எழுப்ப என் இசைவை அளிக்கவேண்டுமென்று முன்னறிவிப்புக் கொடுத்து, அதன்விளக்கத்தை அளித்தார். மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்களின் விளக்கத்தைக் கேட்டபின் எனது தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும் என்று கூறியிருந்தேன்.

ஒரு சட்டமுன்வடிவு ஆய்வுக்குழுவின் ஆய்வில் இருக்கும்போது அதே பிரிவுகளைக் கொண்ட ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க அரசுக்கு உரிமை இல்லை என்றும், எனவே அவ்வாறு இன்றியமையாப் பணிகளை ஒழுங்குபடுத்தும் சட்டமுன்வடிவு ஆய்வுக்குழுவின் ஆய்வில் இருக்கும்போது அதே பிரிவுகளைக் கொண்ட ஒரு அவசரச்சட்டம் பிறப்பித்தது அவை உரிமையை மீறிய செயல் என்று மாண்புமிகு திரு. இரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பேரவை விதி 182 ஐச் சுட்டிக்காட்டி, ஒரு சட்டமுன்வடிவு பொறுக்குக் குழுவின் ஆய்வில் இருக்கும்போது அந்த சட்ட முன்வடிவை ஒட்டி அதே சட்டத்தைக் கொண்டு வரவோ மாற்றங்களோடு கொண்டு வரவோ அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்றும், இந்த விதியை ஒட்டி ஏற்கனவே 1972 ஆம் ஆண்டு இதே போல ஒரு அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்றும், மேலும் ஆய்வுக்குழுவின் முன்னுள்ள சட்டமுன் வடிவிற்கும், பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரச் சட்டத்தின் பிரிவுகளுக்கும் சில மாற்றங்கள் உள்ளன என்றும், எனவே இதில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்றும் மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியது போல, பேரவை விதி 182-ன்படி பேரவை முன் இருக்கும் ஒரு சட்டமுன்வடிவைப் போன்ற ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க உரிமை உண்டு ஆயினும், அம்மாதிரி அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்குங்கால் அதற்கான காரண காரியங்களை விளக்கி பேரவைக்கு ஒரு அறிவிப்பினை வைக்க வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அவசரச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் அம்மாதிரி ஒரு அறிக்கை 25-1-1983 அன்றே பேரவைமுன் வைக்கப்பட்டு விட்டது. பேரவையின்

ஆய்வில் இருக்கும் ஒரு சட்ட முன்வடிவின் பிரிவுகளை உள்ளடக்கிய அவசரச் சட்டம் ஒன்றினை இயற்ற அரசுக்கு உரிமை இருக்கும்போது ஆய்வுக் குழுவின் ஆய்வில் இருக்கும் ஒரு சட்டமுன்வடிவை அல்லது அதன் பிரிவுகளைக் கொண்ட ஒரு அவசரச் சட்டத்தை இயற்ற அரசுக்கு உரிமை இல்லை என்ற வாதத்தை ஒப்புக் கொள்ள இயலாது.

எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்துள்ள அறிவிப்பில் மேலெழுந்த வாரியாக பார்க்குமிடத்து அவை உரிமை மீறல் எதுவும் இல்லை என்பதால், அப்பிரச்சனையை பேரவையில் எழுப்ப என் இசைவு மறுக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்புகள்.

(அ) சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலுள்ள சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மேற்குறித்த சேலம் மாவட்டத்தில் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் தாரமங்கலம் தோப்பூர் சாலையில் கிலோமீட்டர் 3–6ல் சரபங்கா ஆற்றின் குறுக்கே ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணிக்கு 1979 நவம்பரில் அரசின் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பணிக்கு தலைமை பொறியாளரால் ரூ. 5 இலட்சத்திற்கு தொழில நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு திரு. மக்பூல்ஜான் என்னும் ஒப்பந்தக்காரரிடம் ஜூன் 1980-ல் ஒப்படைக்கப்பட்டது. ஒப்பந்தத்தின்படி இப்பணி 20–4–81-க்குள் முடிக்கப்பட வேண்டும். ஆனால் ஒப்பந்தக்காரர் ரூ. 1.33 இலட்சத்திற்கான பணிகள் முடிந்ததும் வேலையின் வேகத்தைக் குறைத்து விட்டார்; இது தொடர்பாக அவருக்கு பலமுறை அறிக்கை அனுப்பியும் ரூ. 1800/- அபராதம் விதித்தும் ஒப்பந்தப்படி அவர் வேலையை முடிக்கவில்லை. எனவே அவரது ஒப்பந்தம் முறிக்கப்பட்டது. மீதமுள்ள பணிகள் ஒப்பந்த விதிப்படி அவர் செலவிலேயே புதிய ஒப்பந்தக்காரரால் செய்யப்படவேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்